
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1185**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

**58**

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.

# இடையூறுகளுக்கு அஞ்சாத அறிவாசிரியர்!

வேலூர் கந்தசாமி கண்டர் பள்ளியில், பொன்னம்பலனார் பணியாற்றிய காலத்திலேயே தனது சொந்த ஊரான செந்துறையில் இருந்து ஆண்டுக்கு, ஏழெட்டு மாணவர்களை அழைத்துச்சென்று, பரமத்தி வேலூரில் தன் வீட்டிலேயே தங்கவைத்து, அவர்களைப் படிக்கவைத்தார். பின்னர், அங்கிருந்து பணியில் நீக்கப்பட்டபோது, சேலத்தில் பணி வழங்கிட அவருக்குப் பரிந்துரைத்தவர் தந்தை பெரியார். கந்தசாமி கண்டர் பள்ளியில் இருந்து பொன்னம்பலனார் நீக்கப்பட்டபோது, அவரோடு ஏழு ஆசிரியர்கள் வேலையை விட்டுவிட்டனர். ஏறத்தாழ 6 ஆண்டுகள் அங்கு பணியாற்றிய பின்னர், முசிறிக்குப் பணி மாறுதல் அடைந்தார்.

அப்போது, திருச்சியில் பெரியாரின் கூட்டம் எங்கு நடைபெற்றாலும், பொன்னம்பலனார் சென்றுவிடுவார். இவர் பணியாற்றிய பள்ளியின் தலைமை ஆசிரியராக இருந்தவர் சுப்புசாமி ஐயர். அந்தக் காலத்தில் பள்ளியில் இறைவணக்கப் பாடலும் நாட்டுப்பண்ணும் தலைமை ஆசிரியர் விருப்பப்படியே பாடப்படும். 10.11.1952 அன்று காலை, பாரதியாரின் 'வாழிய செந்தமிழ்' பாடல் பாடப்பட்டது. அந்தப் பாடலில், **'ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும் சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!'** என்ற வரிகளை மாணவர்கள் பாடியதைக் கேட்டதும் 'நிறுத்துங்கள்' எனக் குரல் கொடுத்தார்



கீழமாளிகையில் பெரியாருடன் பொன்னம்பலனாருக்கு வைக்கப்பட்டுள்ள சிலை.

பொன்னம்பலனார். இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த தலைமை ஆசிரியர், 'டேய் ஃபூல்' எனத் திட்ட, 'தமிழாசிரியரின் மானம் காக்க ஆரிய ஆசான் மன்னிப்பு கேட்க வேண்டும்' என வலியுறுத்தினார்.

மாணவர்கள் பலர், தலைமை ஆசிரியரை விட தமிழாசிரியர்மீது பேரன்பு கொண்டிருந்ததால், 'தமிழ் வாழ்க, தமிழாசிரியர் வாழ்க, ஆரிய ஆசிரியரே மேடைக்கு வா' என முழக்கமிட்டனர். பின்பு மாணவர்களை அமைதிப்படுத்தி, வகுப்புகளுக்கு அனுப்பினார் பொன்னம்பலனார். ஆனால், மறுநாளே பணிநீக்க ஆணை கிடைத்தது. இதை அறிந்த மாணவர்கள், ஊர்வலம் நடத்தி பொன்னம்பலனாருக்கு ஆதரவாகக் களத்தில் இறங்கிட, இணையதளம் இல்லாத அந்தக் காலத்திலேயே தமிழ்நாடு முழுக்க செய்தி சென்றுசேர்ந்தது. இது 'இராவண - ஆரியப் போராட்டம்' என 'விடுதலை' கட்டுரை தீட்ட, விவகாரம் நீதிமன்றத்துக்குச் சென்றது. பொன்னம்பலனாருக்கு ஆதரவாக இருந்த மூன்று ஆசிரியர்கள், வேறு ஊர்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

23 மாத சட்டப் போராட்டத்துக்குப் பிறகு, பொன்னம்பலனாரின் பணிநீக்கம் செல்லாது, 23 மாத ஊதியத்தைக் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பு வந்தது. அப்போதுதான், முசிறியில் இருந்து தனது சொந்த ஊரான செந்துறைக்கு வந்து சேர்ந்தார் பொன்னம்பலனார். ஆனால், திருச்சி முழுவதும் பரவலாக அறியப்பட்ட முகமாக மாறியிருந்தார் பொன்னம்பலனார். இத்தனை இடையூறுகளுக்குப் பிறகு மீண்டும் பணியில் சேர்ந்திருந்தாலும், கருப்புச்சட்டையும் 'விடுதலை' நாளிதழும் இல்லாமல், அவர் பள்ளி வளாகத்தில் ஒரு நாளும் கால் வைத்ததில்லை.

பாவேந்தர் பாரதிதாசனின் சீடரும் 'முல்லைச்சரம்' இதழின் ஆசிரியருமான கவிஞர் பொன்னடியான், திராவிடர் கழகத்தின் பிரச்சாரச் செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழியின் தந்தை அண்ணாமலை ஆகியோர் செந்துறை பள்ளியில், பொன்னம்பலனார் ஆசிரியராக இருந்த காலத்தில் படித்தவர்கள். பள்ளி ஆண்டு விழா, இலக்கிய மன்ற விழாக்களில் பெரியாரும் பாவேந்தரும் பாவாணரும்தான் சிறப்பு அழைப்பாளர்களாக இருப்பார்கள். அப்போது கல்வி அதிகாரியாக இருந்தவர் நெ.து.சுந்தரவடிவேலு என்பதால், எதைப் பற்றியும் கவலைப்படாமல் துணிந்து செயல்பட்டார்.

**...பயணம் தொடரும்**

## மோடியின் தரம் தாழ்ந்த அரசியல்!

தொகுதி மறுவரையறையில், தமிழ்நாட்டுக்கான பிரதிநிதித்துவத்தைக் காக்க உறுதியோடு போராடி, பா.ஜ.க.வின் சூழ்ச்சிகளை நாடாளுமன்றத்தில் முறியடித்திருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம். தென் மாநிலங்களை வஞ்சிக்கும் முயற்சி இது, என்பதை உணர்ந்து, கூட்டாட்சித் தத்துவத்தை மதிக்கும் ராகுல் காந்தி, அகிலேஷ் யாதவ், தேஜஸ்வி யாதவ் போன்ற தலைவர்கள் தி.மு.க.வின் முயற்சிக்குத் துணை நின்றனர். ஆனால், இதைத் திரிபுவாதம் செய்து, உத்தரப்பிரதேசத்தைத் தி.மு.க. இழிவுபடுத்திவிட்டது என அந்த மாநிலத்திற்குச் சென்று போலிக்கண்ணீர் வடித்திருக்கிறார் பிரதமர் மோடி. உத்தரப்பிரதேசத்துக்கான இடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கப்போவதாகக் கூறி தொகுதி மறுவரையறையைத் தி.மு.க. எதிர்த்ததாக விஷமப் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கிறார் பிரதமர்.

எந்த மாநிலத்துக்கும் கூட்டவோ குறைக்கவோ கூடாது என்று தி.மு.க. சொல்லவில்லை. தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவம், 7.18% குறையக் கூடாது என்பதுதான், தி.மு.க.வின் நிலைப்பாடு. ஆனால், அதற்கு எந்த உறுதியையும் மோடியோ, அமித்ஷாவோ அளிக்க முன்வராமல், தமிழ்நாட்டை வஞ்சித்து, அரசியல் பிரதிநிதித்துவம் அற்றவர்களாக மாற்ற முயற்சி செய்த சதியை அறிந்துதான், இந்த மசோதாவைக் கழகம் எதிர்த்தது. ஆனால், அந்த உண்மை வெட்டவெளிச்சமான பின்னரும் சுயநல அரசியலுக்காக விஷமத்தை விதைத்திருக்கிறார் பிரதமர் மோடி. ஆனால், நாடாளுமன்றத் தேர்தலிலேயே உ.பி. மக்கள் மோடியைக் கைவிட்டுவிட்டனர். அங்குள்ள 80 தொகுதிகளில் 36 இடங்களை மட்டுமே தேசிய ஜனநாயகக் கூட்டணி வென்றது. இந்தியா கூட்டணிதான் 43 இடங்களைக் கைப்பற்றியது.

மோடியின் பொய் மூட்டைகளை இனி, உ.பி. மக்கள் ஒருபோதும் நம்பப்போவதில்லை. ஒடிசாவில், பீகாரில், உ.பி.யில் என ஒவ்வொரு மாநிலமாகச் சென்று தமிழர்களை இழிவுபடுத்தும் மோடியை, தமிழ்நாட்டு மக்களும் நிரந்தரமாக நிராகரித்து விட்டனர். மே 4-இல் மீண்டும் ஒருமுறை அது நிரூபணமாகும்.

## ஃப்ளாஷ்பேக்



### கண்டனப் பொதுக்கூட்டத்தில்...



ஸ்டோன் வி.அருண்குமார்

2012-ஆம் ஆண்டு, தென் சென்னை மாவட்டக் கழகத்தின் சார்பில், மயிலாப்பூர் மாங்கொல்லையில், அ.தி.மு.க. ஆட்சியைக் கண்டித்து கழகத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையில், கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அப்போதைய தென் சென்னை மாவட்டச் செயலாளர், மறைந்த அண்ணன் ஜெ.அன்பழகன் அவர்களின் ஏற்பாட்டில், அன்றைய பகுதிக் கழகச் செயலாளர், தற்போதைய மாவட்டக் கழகச் செயலாளர் அண்ணன் மயிலை த.வேலு அவர்கள் கூட்டத்துக்கான பணிகளை முன்னின்று நடத்தி, தலைவரிடம் பாராட்டுப் பெற்றார். கூட்டத்தில் தலைவர் கலைஞர் அவர்களுக்குப் பொன்னாடை அளித்து மரியாதை செய்த தருணம்.

**- ஸ்டோன் வி.அருண்குமார், சென்னை தென்மேற்கு மாவட்டப் பிரதிநிதி, முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர், மயிலாப்பூர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

**108**

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

# வாக்குரிமை காத்த களப்பணி!



**வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லை என்பதைத் தேர்தல் நாளன்று தெரிந்துகொண்டு, தி.மு.க.தான் தங்கள் பெயரை நீக்கிவிட்டது என்று சிலர் குற்றம் சாட்டுகிறார்களே?**

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பது-நீக்குவது இவையெல்லாம் ஒன்றிய அரசின் கீழ் உள்ள சுயாட்சி மிக்க நிறுவனமான இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையத்தின் பணி என்கிற அடிப்படைகூடத் தெரியாமல், மாநில அரசின் வேலை இது என நினைத்திருக்கும் அறியாமையின் வெளிப்பாடு. இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் முழுக்க முழுக்க ஒன்றிய பா.ஜ.க. அரசின் கைப்பாவையாகச் செயல்படுகிறது. எதிர்க்கட்சிகளுக்கு சாதகமாக உள்ள சிறுபான்மையினர், தலித் மக்கள், பெண்கள் வாக்குகளை நீக்குவதற்காகவே, எஸ்.ஐ.ஆர். நடைமுறையை அவசரமாகக் கொண்டுவந்து, பீகார் மாநிலத்தில் பலருடைய வாக்குகளை நீக்கியது. இதனை அறிந்து, உடனடியாக விழிப்புணர்வுக் குரல் எழுப்பியவர் தி.மு.க. தலைவரும் தமிழ்நாட்டின் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள்தான்.

தகுதியுள்ள ஒரு வாக்காளரும் விடுபடக் கூடாது என்பதையும், தகுதி இல்லாத ஒரு நபர்கூட வாக்காளர் பட்டியலில் இடம்பெற்று விடக் கூடாது என்பதையும் வலியுறுத்திய கழகத் தலைவர், அதற்காகத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளுக்குமான தி.மு.க.வின் பாக நிலை முகவர்களை, வீடு வீடாகச் சென்று வாக்காளர்களைச் சரிபார்க்கும் பணியில் ஈடுபடச் செய்தார். அத்துடன், தேர்தல் ஆணையத்திடம் நேரில் முறையிட்டு, ஆணையத்தின் தரப்பிலான பி.எல்.ஓ.க்களுடன் பி.எல்.ஏ.-2-க்களும் இணைந்து, எஸ்.ஐ.ஆர். பணியை மேற்கொள்ள வேண்டும் என்பதைத் தி.மு.கதான் உறுதிசெய்தது. உச்ச நீதிமன்றத்திலும் எஸ்.ஐ.ஆர். தொடர்பான வழக்கில் பங்கெடுத்து, வாக்காளர்களின் ஆதார் கார்டை ஆதாரமாகக் கொள்ளலாம் என்கிற உத்தரவைப் பெற்றுத் தருவதிலும் தி.மு.கதான் முதன்மையாக இருந்தது. அதனால்தான், பீகாரைப் போல இல்லாமல் தமிழ்நாட்டில் வாக்காளர்கள் பலரைக் காப்பாற்ற முடிந்தது. இதில் தி.மு.க., அ.தி.மு.க., பா.ஜ.க. என்ற வேறுபாடு பார்க்காமல், தகுதியுள்ள அனைவரையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கும் பணியை ஒரு ஜனநாயகக் கடமையாக மேற்கொண்டவர்கள் தி.மு.க.வினர்தான்.

பா.ஜ.க.வின் அடிமையாகிவிட்ட அ.தி.மு.க. எஸ்.ஐ.ஆருக்கு ஆதரவாக வழக்குத் தொடர்ந்ததையும் இங்கே நினைவுபடுத்த வேண்டும். தி.மு.க.வுக்கு எதிராகச் செயல்படுகிறோம் என்கிற பெயரில், சொந்தக் கட்சிக்காரர்களின் வாக்குரிமையைப் பற்றிக்கூட கவலைப்படாமல் செயல்பட்டார் எடப்பாடி பழனிசாமி. ஆனால், தி.மு.க. தலைவர் எஸ்.ஐ.ஆர். பணிகளில் தனது கட்சியினர் மட்டுமன்றி பொது மக்களும் கவனமாக இருந்து, தங்கள் வாக்குரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். தி.மு.க.வினரின் முழுமையான களப்பணியும் விழிப்புணர்வும்தான் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் தகுதியான வாக்காளர்களைத் தக்கவைத்து, புதிய வாக்காளர்களை இடம்பெறச் செய்தது. தமிழ்நாட்டில் அமைதியான முறையில் தேர்தல் நடந்ததற்குக் காரணமும் தி.மு.க. அரசின் கட்சிப் பாகுபாடற்ற வாக்காளர் பட்டியல் சீராய்வுப் பணிகள்தான்.

வாக்காளர் பட்டியல் என்றால் என்ன, வாக்குச்சாவடியின் நடைமுறைகள் என்ன, வாக்களிக்கும் நேரம் எதுவரை என்பதை அறியாத - தாங்கள் சார்ந்திருந்த கட்சியால் சரியாக வழிநடத்தப்படாத ஒரு கூட்டத்தின் குற்றச்சாட்டுகள், அவர்களின் அரசியல் அறியாமையையும் பொதுவிதிகள் பற்றிய அறிவின் போதாமையையும்தான் காட்டுகின்றன.

...வினா தொடரும்.

## மலரும் நினைவுகள்

### நிவாரணப் பணிகளில் கழகத்தினர்!

1955-ஆம் ஆண்டு, தமிழ்நாட்டில் பெரும்புயல் மற்றும் தொடர் மழையால் மக்கள் மாபெரும் அவதியைச் சந்தித்தனர். நூற்றுக்கணக்கான உயிர்கள் பலியாகின. கால்நடைகள், உணவுப் பயிர்கள் நாசமாகின. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ, கழகத்தின் சார்பில் முகாம்கள் அமைக்கப்பட்டன. பொருள், பணம், உதவிகளைத் திரட்டியது கழகம். அரசு ஏற்பாடு செய்த புயல் நிவாரண ஆலோசனைக் கூட்டத்தில், அரசின் நிவாரண நிதிக்கு 1,000 ரூபாய் வழங்கியது கழகம்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026. Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900